**தலைப்பு 292 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ)பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது. அதன் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் ரூபா 998,657,362 ஆன கட்டுநிதி மீதிக்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பிரகாரம் கட்டுநித இணக்க கணக்கொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் ஷ | 2018 ஆம் ஆண்டின் கணக்கு கூற்றுக்களைத் தயாரிக்கும் போது 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 7(vi) பந்தியின் பிரகாரம் கட்டுநிதி இணக்க கணக்கொன்று தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் அதற்காக போதியளவு வழிகாட்டல் காணப்படவில்லை. |

**1.6.2 நிதி செயலாற்றல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளில் உள்ளடக்கப்பட்ட தொகையில் கிடைத்த ரூபா 11,221,976 ஆன வைப்பு பெறுவனவு மற்றம் ரூபா 2,536,919 ஆன அரச உததியோகத்தர்களின் முற்பண | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியல்லாத ஏனைய பெறுவனவுகள் ரூபா 57,855,975 என தயவுடன் தெரிவித்துக் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுவனவு மீண்டுமொரு முறை வருமானம் அல்லாத பெறுவனவாக குறிப்பிடப்பட்டிருந்தது. | | கொள்கின்றேன். |
| (ஆ) | வருமானம் அல்லாத பெறுவனவுகள் ரூபா 76,100,474 பெறுமதியில் ரூபா 1,452,504 ஆன மீள் கொடுப்பனவு கழிக்கப்படாமல் நிதிக்கூற்றுக்களில் வருமானமல்லாத பெறுவனவுகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருமானத்திலிருந்து மீள் கொடுப்பன கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் |

### 1.6.3 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்களின் மீதி ரூபா 890,897,334 ஆக இருந்த போதும் 2018 சனவரி 01 இல உள்ளவாறு ஆரம்ப மீதி ரூபா 2,151,650,841 ஆக காண்பிக்கப் பட்டிருந்தமையால் ரூபா 1,260,753,507 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. மேலும் திறைசேரியின் அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம் நிதியல்லாத சொத்துக்கள் ஆரம்ப மீதி ரூபா 2,149,691,465 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்களின் மீதி ரூபா 2,151,650,841 ஆக இருந்தமையால் ரூபா 1,959,376 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது | சரியாக நிதிக் கூற்றுக்களில் பெறுமதிகள் குறிப்பிடப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் நாளதுவரையாக்கப்பட்டது |
| (ஆ) | மீளாய்வாண்டில் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் கொள்வனவுகளுக்குரிய ரூபா 21,964,322 ஆக இருந்த போதிலும் மாதாந்த கணக்கக் கூற்றின் பிரகாரம் அம்மீதி ரூபா 26,905,179 ஆக இருந்தமையால் ரூபா 4,940,857 ஆன வேறுபாடு காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | மீண்டும் ஆரம்பத்திலிருந்து நிலையான சொத்தக்களை நாளதுவரையாக்கி உள்ளதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (இ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறையல்லாத சொத்துக்களாக ரூபா 2,173,615,163 பெறுமதியொன்று | சொத்துக்கள் அறிக்கை நாளதுவரையாக்கப் | 2019 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்கள் பதிவேடு |

| | | |
|---|---|---|
| நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதும், அரச கணக்குகள் திணைக்களப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட சொத்துக்கள் அறிக்கையின் பிரகாரம் அப்பெறுமதி பூச்சிய பெறுமதியாக எடுத்திருந்தது. | பட வேண்டும். | நாளதுவரையாக்கப்படும். |

**1.6.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2003 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் இறந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 62,668 ஆன ஆதனக் கடனை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாரிசுகள் தொடர்பாக தகவல்கள் கிடைக்காமையால் இம்மீதியை தீர்வுசெய்வதற்கு முடியாதிருப்பதாக தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (ஆ) திணைக்கள பதிவேடுகள் மற்றம் திறைசேரி அச்சீட்டுக் குறிப்புகளுக்கு இடையே 2015 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வரும் ரூபா 100,125 ஆன வேறுபாடு இனங்காணப்பட்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 427 இன் பிரகாரம் வேறுபாடு இனங்ாணப்பட்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும் | தீர்வுசெய்வதற்கு போதியளவு தகவல் இல்லாமையால் எதிர்காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.6.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுகளில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 2,173,615,163 ஆன நிலையான சொத்துக்கள் காண்பிக்கப்பட்டிருந்த நிலையான சொத்தக்கள் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு பராமரிக்கப்பபட வேண்டும். | கணனி மென்பொருள் மூலம் பெற்றுக்கொண் அறிக்கை 0 ஆக இருந்ததால் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) திணைக்களத்தின் 12 பதவிகளுக்குரிய 204 | பிணைகள் பதிவேடு பேணப்பட | பிணைகள் பதிவேடு நாளதுவரையாக்கப்படுவதற்கு |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,448,000 ஆன பிணைப் பணம் அறவீடு தொடர்பான சான்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை | வேண்டும். | குறித்து கொள்ளப்பட்டது. |

**1.6.6 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| **(அ)** | உத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேடு | | |
| | உத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 845(1) இன் பிரகாரம் 26 ஆம் பிரிவின் பிரகாரம் கடமை தொலைபேசி பதிவேடு பேணப்பட வேண்டும். | பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| **(ஆ)** | பிணைகள் பதிவேடு | | |
| | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணைகள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | பிணை பதிவேட்டில் குறைபாடுகள் சீராக்கப்பட்டு நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. |
| (இ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | | |
| | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்களை நாளாந்தம் பரிசீலனை செய்யக்கூடிய முறையில் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேட்டில் அந்த பொறுப்புக்கள் பதிவு செய்யப்பட வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணிச்செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஈ)** வாகன சம்பவக் குறிப்பு புத்தகம்

| | | |
|---|---|---|
| வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 1645(அ) இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் பொது 267 மாதிரியின் பிரகாரம் ஒவ்வொரு வாகனம் தொடர்பிலும் வாகன சம்பவக்குறிப்பு புத்தகங்கள் பேணப்பட வேண்டும். | உரிய சம்பவக் குறிப்பு புத்தகங்கள் பிரிவு பொறுப்பான பதவிநிலை உத்தியோகத்தர் பொறுப்பில் காணப்படுவதுடன் குறைபாடுகள் காணப்படும் புத்தகங்களை நாளதுவரையாக்க உத்தியோகத்தர்கள் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர். |

**(உ)** வாகன நிரட்படுத்தும் பதிவேடு

| | | |
|---|---|---|
| திணைக்களத்திடம் 138 வாகனங்கள் காணப்பட்ட போதும் வாகனங்கள் தமக்கு ஒப்படைக்கப்பட்ட திகதி, கையளிக்கப்பட்ட திகதி போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்ட வாகன நிரட்படுத்தும் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகன நிரட்படுத்தும் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | நிதிப்பிரமாணததின் பிரகாரம் தயாரிக்கப்படவில்லை. |

## 1.6.7 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது..

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு | மீளாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |

எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

### 1.6.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| (i) XIX ஆம் அத்தியாயத்தின் 5.6 பிரிவு | 2017 ஆம் ஆண்டில் மதிப்பீட்டு காலம் முடிவடைந்து 19 அரச வீடுகளிலிருந்து அந்த சிக்கன வாடகையே மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்டிருந்தது. | அரச விடுதிகள் மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | மதிப்பீட்டு அறிக்கை கொண்டு வரப்பட்டு தேவையான நடவடிக்கை எடுப்பதாக |
| (ii) XIX ஆம் அத்தியாயத்தின் 5.7 பிரிவு | ஐந்து உத்தியோகத்தர் களிடமிருந்து 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வீட்டு வாடகையாக ரூபா 218,139 குறைத்து அறவிடப்பட்டிருந்தது. | வாடகை குறித்த திகதியில் உரிய அளவின் பிரகாரம் அறவிடப்பட வேண்டும். | வீட்டு வாடகை அறவிடும் போது ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக |
| (iii) XIX ஆம் அத்தியாயத்தின் 0.6.1 மற்றும் 6.15 உபபிரிவு | 26 அரச வீடுகளில் குத்தகை காலத்தை விஞ்சியிருந்த போதும் அவ்வீடுகளில் உத்தியோகத்தர்கள் குடியிருப்பதாக அவதானிக்கப்பட்டது. | உடன்படிக்கையின் பிரகாரம் 05 ஆண்டு காலப் பகுதிக்கு மாத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | பதில் கிடைக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சநனநாயக சோஷலிசக் குடிரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நிதிப்பிரமாணம் 454(1) | 2015 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 1,680,750 | அரசிற்கு சொந்தமான | பொருத்துதல் பதிவேட்டில் |

| | | |
|---|---|---|
| தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தியிருந்த CCTV கெமரா முறைமை 03 ஆண்டு காலம் கடந்திருந்த போதும் எந்தவொரு பதிவேடுகளிலும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை | ஒவ்வொரு பொருட்கள் வழங்கல் மற்றும் பதிவேட்டில் உட்படுத்த வேண்டும் | உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 21 மீண்டெழும் செலவின விடயங்களில் ரூபா 14,443,469 ஆன நிதிஏற்பாடும் 28 மூலதன செலவின விடயங்களில் ரூபா 629,630,828 ஆன நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமானதாக இருத்தல் வேண்டும். | எதிர்பார்த்த விடயம், கட்டுநிதி கிடைக்காமை. உறுதிச்சீட்டு சமர்ப்பிக்கப்படாமை பேரில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது. |
| (ஆ) | செலவின விடயமொன்றுக்கு ரூபா 3,000,000 மாற்றப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் ரூபா 4,535,643 அல்லது 62 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் முறையான திட்டமின்றியும் தேவைப்பாடொன்று இன்றியும் பணம் மாற்றப்பட்டிருந்தது. | செயற்பாடு முன்னரே திட்டமிட்டு மேற்கொள்ளப்பட வேண்டும். | தவிர்க்க முடியாத காரணங்களினால் சேமிக்கப்பட்டது. |
| (இ) | உலக கால்நடை அமைப்பிற்கு அங்கத்துவ கட்டணத்தில் ஒரு பகுதியாக செலுத்திய ரூபா 1,983,519 தொகை முறையான அங்கீகாரமின்றி மூலதன செலவின விடயத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. | முறையான அங்கீகாரமொன்றுடன் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | உலக கால்நடை அமைப்பின் அங்கத்துவ கட்டணத்தை செலுத்துவதற்கு குறித்த செலவின விடயத்தில் போதியளவு நிதிஏற்பாடு இல்லாமையால் கொடுப்பனவு செய்யப்பட்டது. |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொறியியல் பிரிவிற்கு கிடைத்த சான்றுறுதிப் படுத்தப்படாத பட்டியல்களின் பெறுமதி ரூபா 18,362,056 ஆன பொறுப்புக்களாக காட்டப்படவில்லை | சுற்றறிக்கையின் பிரகாரம் சகல பொறுப்புக்களும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | தாமதத்தினால் இடம் பெற்றுள்ளதாக தெரிவித்துக் கொள்கின்றேன் |
| (ஆ) | 03 மூலதன செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 1,333,437 பெறுமதியான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 94(2) இன் பிரகாரம் செயற்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (இ) | 02 மூலதன செலவின விடயங்களுக்காக பொறுப்புக்கள் காண்பிக்கப்படாமல் 2018 ஆம் ஆண்டில் ரூபா 1,475,450 செலவினம் 2019 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பொறுப்புக்கள் சரியாக இனங்காணப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (ஈ) | மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 1,980,679 ஆக இருந்த போதும் அத்தொகையை பொறுப்பாக காண்பிக்காமல் 2019 ஆம் ஆண்டின் நிதிஏற்பாடுகளிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பொறுப்புக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | பெறுமதி சேர் வரி கொடுப்பனவாக செலுத்தி பணமாக இருந்ததுடன் உறுதிப்படுத்திய பின்னர் கொடுப்பனவு செய்யப்பட்டது. |

## 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து கிடைத்த ரூபா 75,648,147 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு பயன்படுத்தாமல் மீள அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. | நிதி ஏற்பாடுகளை ஆக்கபூர்வமான பயன்படுத்த வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை |

## 2.4 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 7 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 95,547 ஆன முற்பணத் தொகை பயன்படுத்தாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | தேவைப்பாட்டிற்கு ஏற்ப முற்பணம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் | இதற்கு பிறகு உரிய பணிப்பாளர்கள் அறிவூட்ட நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஆ) 66 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 4,992,011 ஆன முற்பணத்தொகையில் ரூபா 1,324,007 தொகை சேமிக்கப்பட்டிருந்தது | சரியான அளவில் முற்பணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) செயல்நிமித்த கட்டுநிதி வழங்கக்கூடிய ரூபா 100,000 எல்லையை விஞ்சிய 124 சந்தர்ப்பங்களில் 29 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 93,599,988 ஆன முற்பணம் வழங்கப்பட்டிருந்தது, | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | எதிர்காலத்தில் நிலைமையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.5 வைப்பு மீதிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 ஆண்டுகளை விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,498,731 பெறுமதியான 60 நிறுத்தி வைக்கப்பட்ட மீதிகள் அரசின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | அம்மீதிகள் இனங்காணப் பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படு |
| (ஆ) | ஒப்பந்த பராமரிப்புக் காலத்தை மிகைத்த ரூபா 2,453,292 பெறுமதியான 63 நிறுத்திவைத்தல் மீதிகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | நிறுத்திவைத்தல் தொடர்பாக சீராக்கம் செய்யப்பட வேண்டும் | அம்மீதிகள் இனங்காணப்பட்டு அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு அல்லது குறித்த நிறுவனங்களுக்கு கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த பாதீட்டினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்த போதும் அந்நிதிஏற்பாடுகளிலிருந்து முன்னைய ஆண்டில் ரூபா 51,772,120 பொறுப்புக்கள் தீர்வு செய்யப்பட்டிருந்தன. | குறித்த ஆண்டின் செலவினம் மாத்திரம் வருடாந்த பாதீட்டு திட்டத்தினுஸடாக செலுத்தி தீர்வுசெய்யப்பட வேண்டும | திட்டமிடப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் மூலதன நிதிஏற்பாடு ரூபா 1,163,000,000 ஆக இருந்த போதிலும் செலவினம் ரூபா 730,921,347 ஆக இருந்தமையால் மொத்த மூலதன செயற்பாடு | செயற்பாட்டு செலவினம் மூலதன செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ள நடவடிக்கை | மூலதன செலவின விடயங்களின் கீழ் அதனை செயற்படுத்துவதற்காக செலவிடப்பட்ட மூலதன தன்மையமல்லாத நேர் செலவினங்களுக்காக |

| | | |
|---|---|---|
| களிலிருந்து 37 சதவீதம் அளவில் சேமிக்கப்பட்டிருந்தது. | எடுக்க கூடாது. | செலவிட நேர்ந்தது. |

**3.2 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 7000 எருமை மாடுகளின் செயலாற்றல் பரிசோதனை, மரபணு மற்றும் உணவு வழங்கும் முகாமைத்துவத்தை மேம்படுத்துதல், 02 ஹெக்டேயரில் விதை அபிவிருத்தி செய்தல் மற்றும் கோழி மற்றம் அண்மித்த உற்பத்தி மேம்படுத்தல்கள் போன்ற 04 செயற்திட்டங்களுக்காக ரூபா 9,890,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எந்தவொரு செயற்பாட்டையும் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் செயற்படுத்த வேண்டும் | தொடர்ச்சியாக மேற்கொள்ளும் செயற்திட்டமொன்றாக தெரிவிப்பதுடன் சேனா குடம்பி தொற்று நோய் நிலைமை யினால் விதைகளை பெற்றுக் கொள்ள முடியாதிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

**3.3 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளப்படாமை**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றத.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 நிர்மாண ஒப்பந்தங்களின் பெறுமதி ரூபா 165,831,215 இற்குரிய மதிப்பீடு தயாரித்தல் கட்டமைக்கபபட்ட திட்டம் மற்றும் விரிவான திட்டத்தை தயாரிப்பதற்கு தேசிய பொறியியல் ஆராய்ச்சி நிலையத்திற்கு ரூபா 1,602,094 தொகை 2018 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் 2019 மே மாதம் வரையில் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை | பாதீட்டின் மூலம் வழங்கப்படும் நிதிஏற்பாடுகளை உயர் மட்டத்தில் பயன்படுத்த திட்டமிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

### 3.4 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமல் கைவிடல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றத.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மத்திய கோழி ஆராய்ச்சி நிலையத்தில் காணப்பட்ட தாரா கொட்டகை 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,562,325 செலவில் மாட்டுத் தொழுவமொன்றாக மாற்றியிருந்த போதிலும் மாட்டுத்தொழுவம் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலவிடப்பட்ட பணத்திற்கு பொருளாதார ரீதியான பெறுமதியொன்றை பெற்றுக்கொள்வதற்கு செயற்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும் . | மாட்டுத் தொழுவம் விளைவற்றுக் காணப்பட்ட போதும் எதிர்காலத்தில் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன் |

### 3.5 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொறியியலாளரின் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட கூறுவிலை மற்றும் ஒப்பந்தக்காரர்களின் விலைகளுக்கு இடையே 03 ஒப்பந்தங்களுக்கரிய ரூபா 5,200,509 ஆன அசாதாரன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்ட காரணத்தினால் குறைந்த பெறுமதியுடைய செயலாற்றல் பாதுகாப்பு பிணையொன்று பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஒப்பந்தங்களின் எதிர்கால நிச்சயமற்ற தன்மை தொடர்பாக திணைக்களம் எடுக்கக்கூடிய நவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவை வழிகாட்டலின் 7.9.1(இ) மற்றும் (ஈ) வழிகாட்டலின் பிரகாரம் திடநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விலை பகுப்பாய்வொன்றை ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கும் செயலாற்றல் பாதுகாபினை 10 சதவீதத்திற்கு பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ரூபா 45,429,714 தொகையான 15 செயற்பாடுகளுக்காக ரூபா 27,957,374 தொகையை மிகைத்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மொத்த கிரயமதிப்பீடு சரியாகவும் நடைமுறை ரீதியாகவும் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்துவரும் ஆண்டுகளில் இந்நிலைமையை குறைப்பதற்கு கவனத்திற் கொள்ளப்படும் |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொலன்னருவ செயற்கை சினைப்படுத்தல் நிலையத்தில் 6746 சதுர அடி அளவிலான 06 அரசாங்க வீடுகள், 01 சைலேஸ் வசதிகள் கட்டிடம், 01 மின்பிறப்பாக்கி, 01 கெட்டபிலர் மின்பிறப்பாக்கி, என்பன 01 ஆண்டு முதல் 19 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் விளைவற்றுக் காணப்பட்டன. | பொருத்தமான நடவடிக்கைளை எடுக்க செயற்பட வேண்டும். | அரசாங்க வீடுகளை புதுப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுள்ளதுடன பொருள் மெய்மையாய்விற்காக உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | கால்நடை புலனாய்வு நிலையத்தில் பால் தொழில் நுட்ப ஆய்வுகூடத்திற்கு 2017 திசெம்பர் மாதத்தின் போது மின்பிறப்பாக்கி கொள்வனவிற்காக ரூபா 4,484,698 மற்றும் இந்திரத்தை நிறுவுவதற்காக ரூபா 725,928 ஆன கட்டிட செலவினம் உட்பட மொத்தம் ரூபா 5,210,626 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் 2019 மே மாதம் வரை இயந்திரம் நிறுவப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும். | 2019 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் நிருவப்படுவதாகவும் அதன் பின்னர் கட்டிடங்கள் பயன்பாட்டிற்கு எடுக்க முடியுமெனவும் |

**3.7 நட்டங்களும் சேதங்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அறவிடுவதற்கு அல்லது விட்டுவிடுவதற்கு உள்ள நட்டங்களாக 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,030,300 தொகையான 16 சம்பவங்கள், 05 ஆண்டுகள் முதல் 10 | நிதிப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ரூபா 119,882 ஆன 29 சம்பவங்கள் தொடர்பாக 2019 பெப்ரவரி 29 ஆந் திகதி வரையிலும் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | செயற்கை சினைப்படுதத்ல் நிலையத்தில் மின்சாரத்திற்காக 2009 ஆகஸ்ட் முதல் 2018 ஆகஸ்ட் வரை ரூபா 89,736 ஆன மிகை கட்டணமொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மிகை கட்டணம் செலுத்தாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தபால் தாமதம், புத்தகங்களில் பதிவு செய்தலில் மற்றும் அங்கீகரித்தல் காசோலை கையொப்பமிடல் போன்ற சந்தர்ப்பங்களுக்காக சிறிது காலம் எடுப்பதால் தாமதமடைந்திருந்ததாக |
| (இ) | திணைக்களத்தின் 12 உத்தியோகதத்ர்களுக்கு வெளிநாட்டு கலவி விடுமுறை பெற்றுக்கொண்டு பிணை பொறுப்பு கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் கட்டாய சேவைக்காலத்தை பூர்த்தி செய்யப்படாமை காரணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 31,245,665 ஆன பிணை பொறுப்புக்களின் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 104 மற்றும் 110 இன் பிரகாரம் பரிசோதனை மேற்கொண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

### 3.8 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச வீடுகளுக்காக மின்மானி பொருத்துவதற்காக நடவடிக்கை எடுக்கபபடாமல் அரச வீடொன்றிலிருந்து மாதத்திற்கு ரூபா 100 வீதம் மின்சார பட்டியலை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் வரை மொத்த மின்சார | ஒவ்வொரு வீட்டிற்கும் மின்மானி பொருத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. |

பட்டியலுக்காக ரூபா 3,603,910 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அரச வீடுகளிலிருந்து கிடைத்த பங்களிப்பு ரூபா 230,736 ஆக இருந்தது.

## 4. நிலைபேறான அபிவிருத்தி

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தினால் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ''நிகழ்ச்சி நிரல்'' தொடர்பாக அறிந்திருக்காமையால் அதன் செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நோக்கி அடைந்து கொள்வதனை மதிப்பிடுவதற்காக அளவுகோல்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வரிசை அமைச்சினால் அந்த அமைச்சிற்குரிய விடயப்பரப்பின் கீழ் எடுக்கப்படும் திணைக்களம், NLDB, Milco போன்ற அனைத்து நிறுவனங் களுக்கும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்கு களை அடைந்து கொள்ளும் அடைவுகள் தொடர்பாக குறிகாட்டிகள் இனங்காணப்பட்டுள்ளன. |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சிரேஷ்ட நிலையில் 58 பதவிகளும், இரண்டாம் மட்டத்தில் 05 பதவிகளும், இரண்டாம் நிலையில் 29 பதவிகளும் ஆரம்ப நிலையில் 40 பதவிகளும் என 82 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் கிடைக்கவில்லை. |